[1978 செப்டம்பர் 14

தொட்டபெட்டா சிகரத்தில் பயணிகள் விடுதி.

*வினா எண். 218—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

உதக மண்டலத்திலுள்ள தொட்டபெட்டா சிகரத்தில் பயணிகள் விடுதி அமைப்பது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை.

தரங்கம்பாடியை மீன்பிடி துறைமுகமாக்கல்.

*வினா எண். 219— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தரங்கம்பாடியை மீன்பிடி துறைமுகமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, 1935-ஆம் ஆண்டு என்று நான் கருதுகிறேன். தஞ்சை மாவட்டத்திற்கு இப்போது தஞ்சை தலைநகராக இருப்பதைப் போல அப்போது தரங்கம்பாடி தலைநகராக இருந்திருக்கிறது. அந்த அடிப்படையிலும் மற்றுள்ள பல்வேறு அடிப்படைகளிலும் தரங்கம்பாடியின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு அதன் முக்கியத்துவத்தை கருதிதான் இன்றைய அரசு அங்கே இருக்கிற கோட்டையை புதுப்பிக்கும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறது. அங்கே இருக்கிற மீனவர்களின் நலனையும் கருத்திற்கொண்டு தரங்கம்பாடியை ஒரு மீன்பிடித் துறைமுகமாக ஆக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவரவர்களே, மீன்பிடித் துறைமுகத்தை அமைப்பது, பெங்களூரில் இருக்கிற மீன்பிடி துறைமுக முதலீட்டு ஆய்வுக் குழுவின் ஒப்புதல் பெற்றுதான் நாம் அமைக்க முடியும். அவர்கள் பரிசீலித்து, இப்போதுள்ள நிலையில் சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். எனவே, உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல தரங்கம்பாடியின் முக்கியத்துவத்தை மனதிற்கொண்டு இந்த அரசு மத்திய அரசை நிச்சயம் வலியுறுத்தும்.